DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 19/2021**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சாத்தன் | Caste: | |
| Father's Name: | முத்துகருப்பன் | Calling: | விவசாயம், கூலிவேலை |
| Village: | சூடியூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 66 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 27.01.2026

( 3 எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1,2 எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா சூடியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன், விவசாயம் செய்து வருகிறேன். சா.சா.2 சுந்தரபாண்டியனை தெரியும், சா.சா.3 சடையன் மகன் ராஜாவை தெரியாது. கோவிந்தன் மகன் செல்வத்தை தெரியாது. சா.சா.5 மதுரை திருநகரை சேர்ந்த உக்கிரபாண்டியன் மகன் வினோத்குமாரை தெரியும். சா.சா.6 பெரியமருதுபாண்டியன் மகன் ஜெயபிரகாசை தெரியும். சா.சா.7 கற்பூர சுந்தரபாண்டியனை தெரியும். நான் பட்டியலினத்தை சேர்ந்த தேவேந்திரகுல வேளாளர் இனத்தை சேர்ந்தவர். எதிரிகள் இருவரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர்கள். 3ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி தெரியும். எங்கள் ஊரில் குமார் என்பவருக்கு சொந்தமான குவாரியில் 4 வருடங்களுக்கு முன்பு வேலை பார்த்தேன். எவ்வளவு வருடமான குவாரியில் வேலை பார்த்தேன் என்றால்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.27 13:19:30 +0530

அந்த குவாரி இயங்கும் வரை வேலை பார்த்தேன். அந்த குவாரியின் நான் வாட்ச்மேனாக வேலை பார்த்தேன். எனக்கு வேலை நேரம் என்னஎன்றால் இரவும்பகலும் வாட்ச்மேனாக வேலை பார்த்தேன். தேதி, மாதம், வருடம் தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு காலை 10.00 – 10.30 மணியளவில் நான் குவாரியில் இருந்தபோது ஒரு சிமிண்ட் கலர் கார் வந்தது, அந்த காரின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த கார் எந்த கம்பெனி வகையை சேர்ந்தது என்றால் படிக்கவில்லை என்பதால் தெரியாது. காருக்கு பின்னால் ஒரு M80 மொபட் வந்தது. அந்த மொபட்டின் நிறம் சிவப்பு. அதன் பதிவெண் படிக்கவில்லை என்பதால் தெரியாது. அந்த மொபட்டில் மணிமாறன் (2ம் எதிரி ) என்பவர் வந்தார். காரில் 1ம் எதிரி துரைப்பாண்டியனும் அவரது மனைவியான 3ம் எதிரி ரங்கநாயகியும் வந்தார்கள். வந்தவுடன் 1ம் எதிரி துரைப்பாண்டி காரில் இருந்து இறங்கி வந்து எங்கடா உங்க ஓனர், எங்கிருந்து எங்கு வந்து குவாரி எடுத்து வேலை செய்கிறான், சுன்னியாண்டி என்று கூறினார். அதற்கு நான் ஓனர் வரவில்லை என்று சொன்னேன், அதற்கு 1ம் எதிரி துரைப்பாண்டி நீ என்னடா சொல்றது ஈனச்சாதி பள்ளப்பயலே என்று சொல்லி செருப்பால் என்னை கன்னம், முதுகில் அடித்தார். 2ம் எதிரி மணிமாறன் பள்ளப்பயலை விடுவதால்தான் திமிறு பாய்கிறான் என்று சொல்லி செருப்பால் கன்னம், முதுகில் அடித்தார். அத்தோடும் அல்லாமல் மணிமாறன் என் முதுகில் அடித்தார். 1ம் எதிரி துரைப்பாண்டியனும்அடித்தார். எனவே நான் கீழே விழுந்துவிட்டேன். மணிமாறன் என் நெஞ்சில் மிதித்தார். நான் மயக்கமடைந்து கீழே விழுந்துகிடக்கும்போது காரில் இருந்து 3ம் எதிரி ரங்கநாயகி இறங்கி வந்தார். 3ம் எதிரி ரங்கநாயகியும் பள்ளப்பயல விடாதீங்க நத்தை திங்கிற

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.27 13:19:35 +0530

பள்ளப்பயல்கல விடாதீங்க என்று சொல்லி அவரும் செருப்பு காலால் என்னை மிதித்தார். இந்த சம்பவத்தை யார் பார்த்தார்கள் என்றால் பார்த்திருந்தால் சுந்தர் பார்த்திருப்பார். சுந்தர் சூடியூரைச் சேர்ந்த சண்முகம் மகன். மேற்படி சுந்தர் குவாரியில் வேலை பார்த்தாரா என்றால் பார்த்தார். நான் மயக்கம் போட்டு விழுந்தவுடன் என்றைக்கு இருந்தாலும் எங்கள் கையில்தான்டா உன் சாவு என்று 3ம் எதிரி ரங்கநாயகி சொன்னார். சொல்லிவிட்டு எதிரிகள் மூவரும் சென்றுவிட்டார்கள். சண்முகம் மகன் சுந்தர்தான் என்னை பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். நாங்கள் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு செல்லும்போது பகல் 12–12.30 இருக்கும். நான் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டேன். என்னுடன் வந்த சுந்தரை வைத்து புகார் மனு தயாரித்தேன். நான் சுந்தரிடம் புகார் மனுவை கொடுத்தேன். அவர் எப்படி காவல்நிலையத்தில் மனுவை சேர்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் நான் புகார் மனுவை காவல்நிலையத்தில் கொடுக்கும்படி சுந்தரிடம் தெரிவித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1**. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது மறுநாள் போலிசார் வந்து விசாரித்தாக நினைவு. நான் 4,5 நாட்கள், ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை. போலிசார்தான் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சாட்சி கூறும் சண்முகம் மகன் சுந்தரை விசாரித்த பிறகு இருவரையும் சேர்த்து குறுக்கு விசாரணை செய்வதாக

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.27 13:19:45 +0530

தெரிவித்ததன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.27 13:19:50 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)